# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 15/2014** **நாள் : 12/07/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
அனைத்து செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவர்களில் ஒருவராகவும், மண்டலச் செயலாளராகவும், கோவை மாவட்ட சிஐடியு-வின் பொருளாளராகவும் பணியாற்றிய தோழர் டி.எஸ். சுப்பையன் அவர்கள் 4.7.2014 அன்று மரணமடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## மதுரை பொதுக்கட்டுமான வட்டக் கிளை துவக்கம்

24.06.2014 அன்று நிர்வாகிகள் கூட்டத்தில் திட்டமிட்டவாறு பொதுகட்டுமான வட்டம் மதுரை கிளை துவங்கப்பட்டது. கிளை துவக்க விழாவில் 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஒரு குறிப்பிட்ட அளவில் சந்தா வசூலித்து மத்திய அமைப்பின் மாநில மையத்திடம் செலுத்தி உள்ளனர். நடைபெற்ற கிளை துவக்க விழாவில் தலைவர் எம். ஜெயகாந்தன், கிளை செயலாளர் எஸ். சிக்கந்தர்பாட்ஷா, பொருளாளர் எம்.பழனி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## மின்வாரிய உழைக்கும் பெண்கள் கூட்டம்

24.06.2014 அன்று மின்வாரிய உழைக்கும்பெண்களின் மாநில ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மதுரையில் நடைபெற்றது. நல்லவருகை என்பது பதிவானது, அக் கூட்டத்தில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவில் உள்ள தேக்கத்தை களையுயம் வகையில் வட்டவாரியாக பெண்கள் கூட்டத்தை நடத்துவது. இவ்வருட இறுதியில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் மாநில மாநாட்டை நடத்துவதென்றும் திட்டமிடப்பட்டது.

## அனல் மின்நிலைய ஊழியர்களின் இயக்கம்

அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கைகளை வைத்து 25.06.2014 அன்று நான்கு அனல் மின்நிலையங்களின் நுழைவு வாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற முடிவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட இயக்கமாக 19.07.2014 அன்று மின்வாரிய தலைமையம் முன்பு அப்பகுதி ஊழியர்களை திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் 19.07.2014 புனல் மின்நிலையத்தில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களுக்கான ஒப்பந்தம் மின்வாரிய தலைமையகத்திலேயே நடைபெற உள்ளதால் அந்த இயக்கம் தற்காலிகமாக தள்ளி

வைக்கப்படுகிறது. தர்ணா இயக்க தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## 6.7.2014 கணக்கீட்டு அதிகாரிகள் கூட்டம்.

கணக்கீட்டுபிரிவு ஊழியர்கள் கூட்டத்திலும், மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டத்திலும் திட்டமிட்டவாறு சென்ற 6.7.2014 அன்று திருச்சியில் கணக்கீட்டு அதிகாரிகளின் கூட்டம் திட்டமிட்டவாறு நடைபெற்றது. 45 கணக்கீட்டு அதிகாரிகள் 21 வட்டங்களிலிருந்து கலந்து கொண்டதோடு அப்பிரிவு இதர பகுதி ஊழியர்களும், மாநில நிர்வாகிகளும் கலந்து கொண்ட வெற்றிகரமான கூட்டமாக நடைபெற்றது. அக்கூட்டத்தில் பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்குவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் பட்டியலிடப்பட்டுள்ளது. பதவி உயர்வுக்கான ஆலோசனையை தனிக்கடிதமாகவும், இதரபகுதி கோரிக்கைகளை தனிக்கடிதமாகவும் கொடுத்து வாரியத்திடம் பேச்சு வார்த்தையை நடத்துவது. பேச்சு வார்த்தையின் தன்மைக்கேற்ப அடுத்தகட்ட இயக்கத்திற்கு திட்டமிடுவது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

களப்பிரிவு ஊழியர்களின் இருவழிப்பாதை சம்மந்தமாக அமைக்கப்பட்ட குழுவின் நடவடிக்கையும் அதோடு அதன் மீது பேச்சு வார்த்தை நடத்திட வேண்டியுள்ளது.

குழுக் கூட்டங்களில் நடைபெறாத குழுக் கூட்டமான நிர்வாகப்பிரிவு, ஒப்பந்த ஊழியர் பிரிவு, பண்டகசாலைப்பிரிவு, குடும்பநலபாதுகாப்பு திட்டக்குழு, கணக்குபிரிவு குழு கூட்டங்களை உடனடியாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## புனல் மின்திட்ட ஊழியர்கள், பதவி உயர்வுக்கான ஒப்பந்தம்

புனல் மின்திட்டத்தில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு குழுவின் ஆலோசனை மீது தொழிற் சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தி இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 19.07.2014 அன்று மின்துறை அமைச்சர் முன்னர் கையெழுத்தாக தேதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## மத்திய அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் பிரேசில் பயணம்

பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் மூன்றாவது தொழிலாளர் கருத்தரங்கு ஜூலை 14 முதல்ர 16 வரை பிரேசிலில் நடைபெற உள்ளது. அந்நிகழ்ச்சிக்கு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் கலந்து கொள்ள உள்ளார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## பொறியாளர் அமைப்பின் கோரிக்கைக்காண இயக்கம்

மின்துறை பொறியாளர் அமைப்பு மின்வாரிய பொறியாளர்களின் கோரிக்கையின் மீது வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 26.07.2014 அன்று மின்வாரிய தலைமை அலுவலகம் முன்னர் மாலைநேர தர்ணா நடைபெற உள்ளது. அதில் பங்குபெறும் வகையில் திட்டங்களில் பணியாற்றும் பொறியாளர்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஜூலை 11 முதல் 14 வரை பெல்லாரியில் நடைபெறும் சிஐடியு-வின் அகில இந்திய பொக்குழு கூட்டத்தில் தோழர கே. விஜயன் அவர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

ஜூலை 28 மற்றும் 29 தேதிகளில் டெல்லியில் நடைபெற உள்ள இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் தோழர்கள் ஆர். ஸ்ரீதர், டி. கோவிந்தராஜூ, வி. இளங்கோ, டி. அறிவழகன், எம். தனலட்சுமி ஆகியோர்களும் அன்றைய தினம் நடைபெறும் நிர்வாகிகள் கூட்டத்தில் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் மற்றும் எஸ். ராஜேந்திரன் அவர்களும் கலந்து கொள்ள உள்ளார்கள் என்பதை தெரிவித்துக கொள்கிறோம்.

## தொழிற்சங்க வகுப்பு

நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் தொழிற்சங்க முன்னணி ஊழியர்களுக்கு ஒருநாள் வகுப்பு நடத்துதென்று முடிவு செய்யப்பட்டது. வகுப்பில் காலை அமர்வில் நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் தொழிற் சங்க பணி என்ற தலைப்பில் காலை அமர்வும், மாலை அமர்வில் மின்ஊழியர் மத்திய அமைப்பின் வரலாறும், விரிவாக்கமும் என்ற தலைப்புகளில் வகுப்புகள் நடைபெற உள்ளன. கலந்து கொள்வோர் விவரம் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு : 1

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

## *குறிப்பு*

1. அலுவலக உதவியாளர் (பயிற்சி), களஉதவியாளர் (பயிற்சி), உதவி பொறியாளர் (பயிற்சி) ஆகியோர்களுக்கு பயிற்சி காலத்தில் வழங்கப்படும் தொகுப்பூதியம் ரூ. 6300/- ரூ. 7300/-, ரூ. 15,200/- என்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது அதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. சூப்பர் நியூமரி கணக்கீட்டு ஆய்வாளர், பின்னர் கணக்கீட்டு ஆய்வாளராக மாறியவர்களுக்கு ஒரு ஆண்டுயர்வு வழங்குவதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவு விரைவில் வெளி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. மீதமுள்ள கணக்கீட்டாளர் 2ம் நிலையில் உள்ளவர்களை கணக்கீட்டாளராக பதவி மாற்றம் செய்வதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

4. களஉதவியாளர் - கம் - மீட்டர் ரீடர், களஉதவியாளர் (பயிற்சி) ஆகியோர்களின் முதன்மைப்பட்டியல் பொருத்தம் சம்மந்தமாக வாரிய உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

5. 931 கணக்கீட்டாளர் 2ம்நிலையிலிருந்து கணக்கீட்டாளராக பதவி மாற்றம் செய்த போது போதிய கல்வித் தகுதி இல்லை என்ற காரணத்தால் பதவி உயர்வு மறுக்கப்பட்டவர்களுக்கு

   * கல்வித்தகுதியை தளர்த்தி கணக்கீட்டாளராக பதவி மாற்றம் செய்வது

   * போதிய தகுதி இல்லாதவர்களுக்கு பழைய பதவிகளுக்கே மாற்றம்செய்வது சம்மந்தமாக வாரியத்திடம் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

6. மீதமுள்ள மஸ்துார் 5480 ஊழியர்களை உடனடியாக களஉதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்ற வற்புறுத்தலின் அடிப்படையில் எல்பர் காலியிடங்களை திட்டங்களில் இருந்து கேட்டு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7. மீதமுள்ள பகுதி நேர ஊழியர்களை பணி நிரந்தரம் செய்யும் வகையில் 3/13 கேட்கப்பட்ட விவரங்களை மட்டும் கேட்டு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வகுப்பு நடைபெறும் இடங்கள்

| வ.எண் | நாள் | வகுப்பு நடைபெறும் மையம்/மண்டலம் | காலை/ மாலை | வகுப்பு ஆசிரியர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 27.07.2014 | சென்னை வடக்கு | காலை<br>மாலை | தோழர் டி.கே. ரங்கராஜன், எம்.பி.,<br>தோழர் எம். வெங்கடேசன்<br>தோழர் கே. அருள்செல்வன் |
| 2. | 27.07.2014 | சென்னை தெற்கு | காலை<br><br>மாலை | தோழர் பி. சம்பத்<br>மாநில செயற்குழு/சிபிஐ(எம்)<br>தோழர் ஆர். குருவேல் |
| 3. | 27.07.2014 | திருநெல்வேலி | காலை<br><br>மாலை | தோழர் ஜி. சுகுமாறன்<br>பொதுச் செயலாளர்/சிஐடியு<br>தோழர் டி. ஜெய்சங்கர் |
| 4. | 27.07.2014 | ஈரோடு | காலை<br><br>மாலை | தோழர்.கே. கனகராஜ்<br>மாநில செயற்குழு/சிபிஐ(எம்)<br>கே. ரவிச்சந்திரன் |
| 5. | 03.08.2014 | விழுப்புரம் | காலை<br><br>மாலை | தோழர் ஜி. ராமகிருஷ்ணன்<br>மாநில செயலாளர்/சிபிஐ(எம்)<br>தோழர் எஸ்.ராஜேந்திரன் |
| 6. | 03.08.2014 | வேலூர் | காலை<br><br>மாலை | தோழர் கே. பாலகிருஷ்ணன்,<br>சட்டமன்ற உறுப்பினர்/சிபிஐ(எம்)<br>தோழர்.கே. விஜயன் |
| 7. | 03.08.2014 | திருச்சி | காலை<br><br>மாலை | தோழர் எம்.என்.எஸ்.வெங்கட்ராமன்<br>மாநில செயற்குழு/சிபிஐ(எம்)<br>தோழர் ஏ. பழனி |
| 8. | 03.08.2014 | கோவை | காலை<br><br>மாலை | தோழர் கே. கனகராஜ்<br>மாநில செயற்குழு/சிபிஐ(எம்)<br>தோழர் து. கோவிந்தராஜு |
| 9. | 03.08.2014 | மதுரை | காலை<br><br>மாலை | தோழர் ஆர். கருமலையான்<br>மாநிலக்குழு/சிபிஐ(எம்)<br>தோழர் வீ. இளங்கோ |

மேற்கண்டவாறு வகுப்புகளை வெற்றிகரமாக நடத்திட நடவடிக்கை எடுத்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**

**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


## 09.08.2014 அன்று நடைபெற உள்ள வகுப்புக்கான நிகழ்ச்சி நிரல்

### **காலை அமர்வு**

| | | |
|---|---|---|
| துவக்கம் | : | காலை 11.00 மணிக்கு |
| காலை அமர்வு நிறைவு | : | பிற்பகல் 1.00 மணிக்கு |

### **இரண்டாம் அமர்வு**

| | | |
|---|---|---|
| பொருள் முன்மொழிவு<br>மத்திய அமைப்பின் வரலாறு | : | பிற்பகல் 1.05 முதல் 1.45 வரை |
| மத்திய அமைப்பு விரிவாக்கம்<br>சம்மந்தமான அறிக்கை<br>முன்மொழிதல் | : | பிற்பகல் 1.50 முதல் 2.15 வரை |

மதிய உணவு இடைவேளை

பிற்பகல் 2.15 முதல் 3.00 வரை

| | | |
|---|---|---|
| குழுவிவாதம் | : | மாலை 3.05 முதல் 3.45 வரை |
| குழு தலைவர்களின் ரிப்போர்டிங் | : | 3.50 முதல் 4.30 வரை |
| தொகுப்புரை | : | 4.35 முதல் 5.20 வரை |

**நிகழ்ச்சி நிரல் நிறைவு**